டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 9.01.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 168 - Madurai | Online Edition

# வேளாண் கழிவுகள் மூலம் தேசிய நெடுஞ்சலைகள் அமைக்கப்படுகிறது

## மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தகவல்

புது தில்லி, ஜன.8

தேசிய நெடுஞ்சலைகள் அமைப்பதில் புதைப்படிம பொருட்களை சார்ந்திருப்பதற்கு மாறாக வேளாண் கழிவுகள் மூலம் தயாரிக்கப்படும் பொருட்களைக் கொண்டு கட்டமைக்கப் பட்டு வருவதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், பைரோலிசிஸ் மூலம் பண்ணை கழிவுகளில் இருந்து தயாரிக்கப்படும் பொருட்களைக் கொண்டு அமைக்கப்படும் சாலைகள் குறைந்த செலவில் நீண்ட காலம் பயன்படுத்தக்கூடிய வகையில் உள்ளதாக குறிப்பிட்டார்.

சாலைக் கட்டுமானத்தில் எஃகு கசடுகள், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் உயிரி எரிபொருள் போன்ற மாற்றுப்பொருட்களை பயன்படுத்தி அமைக்கப்படும் நெடுஞ்சாலைகள் தரமிக்கதாக உள்ளது என்று நிரூபிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இவ்வாறு கட்டமைக்கப்படும் சாலைகள், சுற்றுச்சூழல் மாசுபாட்டை வெகுவாக குறைக்க உதவிடும் என்றும், சுழற்சி அடிப்படையிலான பொருளாதார தீர்வுகளுக்கு உதவிடும் என்றும் அவர் கூறினார். மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இந்திய பெட்ரோலிய நிறுவனம் ஆகியவை இணைந்து உருவாக்கிய இந்த வேளாண் கழிவுகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பசுமைச் சாலைகளை கட்டமைப்பதற்கு பங்களிக்கும் என்று ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

# உரம் விற்பனை நிலையங்களில் பொட்டாஸ் மூட்டையில் ஆய்வு



அரியலூர், ஜன.8

அரியலூர் மாவட்டம், வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக் கனியின் அறிவுரையின்படி, வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு டாக்டர் ராதாகிருஷ்ணன், அரியலூர் மாவட்டத்தில் உள்ள உரம் விற்பனை நிலையங் களை திடீர் ஆய்வு செய்தார். ஆய்வின்போது பொட்டாஸ் உரங்களில் மூட்டைகளை எடை அளவை ஆய்வு செய்தார். உரம் விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் எப்பொழுதும் பி ஓ எஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். விவசாயி களுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரியுடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயியின் கையொப்பம் பெற்று கொடுக்க வேண்டும். உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப் பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களை பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் களைக்கொல்லி உடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

தழைச்சத்துக்காக யூரியாவுக்கு பதிலாக நானோ யூரியா பயன்படுத்தலாம். வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

# மீன் குட்டை பற்றியும் மீன் வளர்ப்பு பற்றி அறிந்த வேளாண் கல்லூரி மாணவர்கள்




திருச்சி, ஜன.8

திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்கள் தினேஷ்.அ, ராம்குமார்.சா.சு.பூ, ரித்திஸ். கு.சி, ரூசோ அருள்ராஜ்.அ.மெ, சந்தோஷ்.ப, சிவா.ரா, சௌந்தர்யன்.வே, வைரமுத்து.ப, விகாஷ், வினோத்குமார்.வீ, விஸ்வநாதன்.சே ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் மண்ணச்சநல்லூரில் தங்கி விவசாயிகளின் வாழ்க்கை முறை மற்றும் பயிர் சாகுபடி முறைகள் பற்றியும் விவசாயிகளிடம் நேரடியாக சென்று அறிந்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக மண்ணச்சநல்லூர் வட்டம், நெற்குப்பை கிராமத்தில் உள்ள நெற்குப்பை ழீ.சிவராஜனை சந்தித்து அவரது பண்ணையில் உள்ள மீன் குட்டை பற்றியும் மீன் வளர்ப்பு மற்றும் குட்டையின் கரையில் மரங்களை வளர்த்து வருமானத்தைப் பெருக்கும் அவரது சிந்தனைகளைப் பற்றியும் கேட்டறிந்தனர். கூட்டு மீன் வளர்ப்பு, மீன் அமிலம் தயாரிக்கும் முறை, கரையில் வைக்க ஏற்ற மரங்கள் குறித்து விளக்கம் பெற்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# செவ்வந்தி பூ விலை சரிவு : பூக்களை தரையில் வீசி டிராக்டரை கொண்டு அழித்த விவசாயிகள்

திண்டுக்கல், ஜன.8

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகேயுள்ள பிள்ளையார்நத்தம், செந்துறை, மணக்காட்டூர் வத்திபட்டி, காசம்பட்டி பட்டணம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் செவ்வந்தி பூ சாகுபடி செய்து வருகின்றனர் விவசாயிகள். பொங்கல் பண்டிகையையொட்டி இப்பகுதி விவசாயிகள் அதிக அளவில் செவ்வந்தி பூக்களை பயிரிட்டிருந்தனர்.



இந்நிலையில், கடந்த சில தினங்களாக பூக்களுக்கு வரத்து அதிகரித்து விலை சரிவு ஏற்பட்டுள்ளது. போதிய கொள்முதல் செய்ய நபர்கள் வராததால் முன்பு கிலோ ரூ.100 முதல் ரூ.120 வரை விற்பனையான செவ்வந்தி பூக்கள் தற்போது ரூ.5 முதல் ரூ.20 வரை மட்டுமே விலை போகிறது. இதனால் பூ பறிக்கும் வேலை செய்யும் நபர்களுக்கு கூட ஊதியம் வழங்க முடியாத சூழ்நிலை உள்ளது.

விற்பனைக்காக மதுரை சந்தைக்கு கொண்டு செல்லப்பட்ட பூக்கள் விற்காமல் போனதால், வேதனை அடைந்த பிள்ளை யார்நத்தம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் அவற்றை நிலத்தில் வீசி செல்கின்றனர். மேலும், சிலர் தங்களது தோட்டத்தில் பயிரிடப்பட்ட பூக்களை நிலங்களில் வீசியும், சில இடங்களில் விவசாயிகள் பூக்களை பறிக்காமல் அப்படியே டிராக்டர் வைத்து உழவடை செய்து வருகின்றனர். இதனால் பல லட்சம் ரூபாய் நஷ்டத்திற்கு விவசாயிகள் தள்ளப்பட்டு உள்ளனர். மேலும் பூக்களுக்கு உரிய விலை கிடைக்க சம்பந்தப்பட்ட துறையினர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

**அன்புடையீர்,**

நமது ‘அக்ரி டாக்டர்’ மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது ‘அக்ரி டாக்டர்’ மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# நிறைவான மகசூல் பெற தரமான விதையின் பங்கு அவசியம்!

இலாபகரமான விவசாயத்திற்கு அடிப்படை தரமான விதையாகும். விதையின் தரம் என்பது அதன் சுத்தத் தன்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம் மற்றும் பிறரகக் கலவன் இன்றி இருத்தல் போன்றவற்றைக் குறிக்கும். நல்ல முளைப்புத்திறன் உள்ள விதைகளே சீராக வளர்ந்து சிறப்பான மகசூல் தரும்.

முளைப்புத்திறன் ஆய்வுகள் தூய விதைகளில் இருந்து மேற்கொள்ள வேண்டும். இந்த ஆய்வுகள் விதை முளைப்பிற்கு சாதகமான சூழ்நிலைகளான ஈரப்பதம், தட்பவெப்ப நிலை, ஊடகம் மற்றும் ஒளி அளவு போன்றவற்றில் மேற்கொள்ளப் படும். விதை முளைப்பிற்கு தேவையான ஊடகம் மணல் அல்லது முளைப்புத்தாட்கள். விதைகளை மணலின் மேற்புறம் வைத்து விதைக்க வேண்டும் அல்லது இரு தாள்களின் இடையில் விதைகளை வைத்துப்பின் அவற்றை துவாலை போல சுருட்டிக் கொள்ளவேண்டும்.

நிர்ணயிக்கப்பட்ட முளைப்புத்திறன் நெல்லுக்கு 80%, மக்காச் சோளம் 90%, சோளம், கம்பு மற்றும் சிறுதானிய பயிர்களுக்கு 75%. பயறு வகைகளுக்கு 75%, வெண்டைக்கு 65% கத்தரி 70%, மிளகாய் 60%, தக்காளி 70%, நிலக்கடலை 70%, பருத்தி (கூஷில.) 75%, பருத்தி 65% மற்றும் எள் 80% இருந்தால் மட்டுமே போதிய பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு அதிக மகசூல் கிடைக்கும்.

எனவே விவசாயிகள் தாங்கள் உபயோகிக்கும் விதையின் தரத்தை அறிந்து கொள்ள மதுரை, நாகமலைப் புதுக்கோட்டை யில் இயங்கி வரும் அரசு விதைப் பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரியினை கொடுத்து ரூ.80/- கட்டணமாக செலுத்தி பரிசோதனை செய்யுமாறு விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் சி.கமலாராணி மற்றும் பெரி.இராமலெட்சுமி தெரிவித்துக் கொள்கிறார்கள்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்** நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW. isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மீன் அமில கரைசல் தயாரிப்பு பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



மதுரை, ஜன.8

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுக்கா, ஸ்ரீரெங்கபுரத்தில் அமைந்துள்ள கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதியாண்டு பயின்று வரும் மாணவிகளான முனிசா, ஜீவிதா, கோபிகா, அன்சல்னா, நெஷ்மிக்கா, அஜிதா மற்றும் தருணிகா ஆகியோர் சேர்ந்து செல்லம்பட்டி என்ற கிராமத்தில் தங்கி விவசாயிகளுடன் நேரடி தொடர்பு கொண்டு விவசாய நடை முறைகள் கிராம வாழ்க்கை மற்றும் வளர்ச்சி பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். வெ.செல்வராஜ், வேளாண்மை உதவி இயக்குநர், தலைமையின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார்கள்.

உசிலம்பட்டி தாலுக்காவில் அமைந்துள்ள செல்லம்பட்டி என்ற கிராமத்திற்கு சென்று, அங்குள்ள அனைத்து விவசாயிகளுக்கும் மீன் அமில கரைசல் தயாரிப்பு குறித்த பயிற்சி அளித்தார்கள்.

**தேவையான பொருள்கள் :** மீன் கழிவுகள், நாட்டு சர்க்கரை மற்றும் பிளாஸ்டிக் / மண் பாத்திரம்.

**செய்முறை :** மீன் கழிவுகளை எடுத்து, அதனுடன் நாட்டு சர்க்கரையை (மீன் கழிவுகள் : வெல்லம் = 1 : 1 என்ற விகிதத்தில்) சேர்த்து நன்றாக கலக்க வேண்டும். இந்த கலவையை பிளாஸ்டிக் அல்லது மண் பாத்திரத்தில் இட்டு, காற்று செல்லும் வகையில் பாத்திரத்தின் வாயை துணியால் மூடி வைக்க வேண்டும். இதனை நிழலான இடத்தில் 15 நாட்கள் வைத் திருந்து, 3–4 நாட்களுக்கு ஒரு முறை நன்றாக கிளறி விட வேண்டும். இயற்கை நுண்ணுயிர்களின் செயல்பாட்டினால், 30 நாட்களில் நொதித்தல் செயல்முறை முழுமையாக நடைபெறும். செயல்முறை முழுமை அடைந்து கருமையான திரவமாக மாறியதும், இதனை வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த கரைசலை வேளாண் மற்றும் தோட்டக் கலை பயிர்களுக்கு தெளிக்கலாம். இக்கரைசலை தெளிப்பதன் மூலம் பயிர்களின் வளர்ச்சி மேம்பட்டு, மண் வளமும் அதிகரிக்கிறது. நன்மை பயக்கும் நுண்ணுயிர்களின் வளர்ச்சியை அதிகரிக்கவும், மண் வளத்தை பாதுகாக்கவும், பயிர்கள் செழிப்பாக வளர்வதற்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதால், விவசாயிகளுக்கு இதை குறித்த பயிற்சி அளித்தார்கள்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# விவசாயிகள் உற்பத்தி நிறுவனத்தை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவிகள்



திருச்சி, ஜன.8

திருச்சி மாவட்டம், துறையூரில் நாளந்தா வேளாண் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவிகள், கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் ஒரு பகுதியாக, மரப்பாச்சி - விவசாயிகள் உற்பத்தி நிறுவனத்தை நேரில் சென்று பார்வையிட்டனர். அப்போது மாணவிகள் விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம் (FPO) செயல்பாடுகள், அதன் நிர்வாக அமைப்பு, உறுப்பினர் சேர்க்கை, உள்ளீட்டு பொருட்கள் விநியோகம், விளைபொருட்களின் சேகரிப்பு, மதிப்பூட்டல், சந்தைப்படுத்தல் மற்றும் லாபப் பகிர்வு முறைகள் குறித்து நேரடியாக அறிந்து கொண்டனர்.

FPO-வின் இரா,தொல்காப்பியன், நிறுவனத்தின் நோக்கம் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதில் FPO-க்களின் பங்கு குறித்து விளக்கினார். மேலும், அரசு வழங்கும் உதவித் திட்டங்கள், கூட்டுறவு விற்பனை, விவசாய தொழில் நுட்பங்கள் மற்றும் சந்தை இணைப்புகள் பற்றியும் மாணவர் களுக்கு எடுத்துரைத்தார். இந்த FPO-வில் பால் சார்ந்த பல்வேறு மதிப்பு கூட்டு (Value Added) துணைப் பொருட்கள் தயாரிக்கப்படு கின்றன. அதில் தயிர், நெய், ஐஸ்கிரீம், குல்பி, பால்கோவா போன்ற பொருட்கள் முக்கியமாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

மேலும், பாலை தரமாகவும் பாதுகாப்பாகவும் சேமிப்பதற்காக அங்கு இரண்டு குளிரூட்டும் அறைகள் (ளீலிலியிஷ்ஐஆ ளீஜுழிதுணுளஷெவி) அமைக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று குறைந்த குளிரூட்டும் அறை ஆகவும், மற்றொன்று குறைந்த குளிரூட்டும் அறை ஆகவும் செயல்படுகிறது.

இதன் மூலம் பால் மற்றும் பால் பொருட்களின் தரம் காக்கப்பட்டு, நீண்ட நேரம் சேமிக்க முடிகிறது. இந்த FPO-வின் செயல்பாடுகள் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் பெறவும், பால் உற்பத்தியை தொழில்மயமாக்கவும் பெரிதும் உதவு கின்றன. இதுபோன்ற முயற்சிகள் கிராமப்புற வளர்ச்சிக்கும், விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் சிறந்த முன்னு தாரணமாக திகழ்கின்றன. இந்நிகழ்வில் வேளாண் மாணவிகள் ஜே.மைக்ளின் ஜோஷி, மு.சோபிகா, பா.சுபஸ்ரீ, செ.சுவாதி, க.தமிழரசி, மு.தனுஷியா மற்றும் க.வெண்முகில் ஆகியோர் விவசாயிகள் உற்பத்தி நிறுவனம் குறித்து தெரிந்து கொண்டார்.



# அரிசி உற்பத்தியில் இந்தியா முதலிடம் (சீனாவை பின்னுக்கு தள்ளி சாதனை) எப்படி?



அரிசி உலக மக்களின் பாதிக்கு மேற்பட்டோரின் அடிப்படை உணவாக உள்ளது. கோதுமைக்கு அடுத்த படியாக அரிசி (RICE) உணவாக உள்ளது என்பது நாம் அறிந்ததே.

**பொருளாதாரத்தில் அரிசியின் பங்கு?**

அரிசி உற்பத்தி உலக பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவை பொருத்தவரை அரிசி உணவு பாது காப்பை (FOOD SECURITY) உறுதிப்படுத்துவதுடன், விவசாயி களின் வாழ்வாதாரம், கிராமப்புற வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதி வருமானத்திற்கு முக்கிய ஆதாரமாக இருந்து நாட்டின் பொருளா தாரத்தை உலக சந்தையில் இந்தியாவின் நிலைப்பாட்டையும் வலுப்படுத்துகிறது.

**பசுமை புரட்சியால் சாதனை? (GREEN REVOLUTION)**

சுதந்திர இந்தியாவின் தொடக்கத்தில் அரிசிக்காக வெளிநாடு களில் கையேந்தும் நிலை இருந்து உணவுக்காக நம் நாடு திண்டாடியது. கோதுமைக்காக அமெரிக்கா போன்ற நாடுகளில் கையேந்திய நாம் நாட்டின் உணவு தானிய உற்பத்தியில் பசுமை புரட்சி 1960யில் M.S.சுவாமிநாதன் தலைமையிலான குழு முயற்சியின் விளைவாக உணவு உற்பத்தியில் தற்சார்பு அடைந்ததுமின்றி உபரி அரிசி உற்பத்தியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அன்னிய செலாவணியை பெருக்கும் நிலைக்கு உயர்ந்து விட்டோம் என்பது குறிப்பிடத்தக்கது.

**அரிசி உற்பத்தில் சீனாவை பின்னுக்கு தள்ளியது எப்படி?**

2024-25 ஆண்டு பயிர் மதிப்பீட்டு காலத்தில் அரிசி உற்பத்தியில் இந்தியா 15.018 கோடி டன் உற்பத்தி செய்து முதலிடத்தில் உள்ளது. காலம் காலமாக இருந்து வந்த சீனாவை பின்னுக்கு தள்ளியது.

சீனாவின் உற்பத்தியோ 14.528 டன்னாகும். இது ஒரு இமாலய சாதனை. உலக நாடுகள் இந்தியாவை உற்று நோக்கின்றன என்றால் மிகையல்ல. ஒரு காலத்திலே உணவு பற்றாக்குறை நாடாக இருந்து வந்த இந்தியா தற்போது உலகிற்கே உணவு அளிக்கும் நாடாக மாறியுள்ளது என்றால் நமக்கு பெருமை யல்லாவா?

**பசுமை புரட்சியால் வந்த இரகங்களின் எண்ணிக்கை தெரியுமா?**

பசுமை புரட்சியின் விளைவாக கடந்த 1969 முதல் 2014 வரை 3969 ரகங்கள் அறிமுகமான நிலையில் தற்போதைய மத்திய அரசு கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ந்து ஆட்சி செய்த காலத்தில் மட்டும் உயர் விளைச்சல் தரக்கூடிய பல்வேறு ரகங்கள் 3235 அறிமுகப்படுத்தி உணவு உற்பத்தியில் உலக அரங்கில் இந்தியா தலை நிமிர்ந்து உள்ளதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுக்கான் பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

நாம் நாடு தற்போது சர்வதேச சந்தையில் அரிசி வினியோகம் செய்கிறது. நாட்டில் போதுமான அளவு உணவு தானிய கையிருப்பு உள்ளதால் உணவு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு உள்ளது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

## வட்டார வளர்ச்சி அலுவலரை சந்தித்து கலந்துரையாடிய வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், ஜன.8

நாமக்கல் மாவட்டம், எலச்சி பாளையம் ஒன்றியத்தில் பிஜிபி வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் தங்கள் இறுதியாண்டு பாடத்திட்டத்திற்காக கிராமப்புற வேளாண்மை அனுபவ பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் இன்றைய தினம் வட்டார வளர்ச்சி அலுவலர் பாலவிநாயகம் மற்றும் ஒன்றிய மேற்பார்வையாளர் வாஞ்சிநாதனை சந்தித்து ஊரக வளர்ச்சி துறையின் பொறுப்புகள் மற்றும் (MGNREGA) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் பற்றி விளக்கமாக கற்றுக்கொண்டனர்.

# பழ ஈக்களை கட்டுப்படுத்தும் கருவாட்டு பொறி – செய்முறை விளக்கமளித்த வேளாண் மாணவர்கள்



பெரம்பலூர், ஜன.8

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், நக்கசேலம் கிராமத்தில், இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி நான்காம் ஆண்டு மாணவர்களான கார்த்திக், கதிர், கவி கிசோர், கவி அரசு, கவியரசு, மணிகண்டன், மாதவன், மதி கணேஷ், மோகன்ராஜ், முத்துப்பாண்டி, நாகராஜ் ஆகியோர் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் விவசாயி முருகன் வயலில் கருவாட்டு பொறி செய்து, செய்முறை விளக்கத்தை கொடுத்தனர். இதை செய்வதற்கு கருவாடு 200 கிராம் தண்ணீர் 500 மிலி தேவைப்படும். முதலில் கருவடை நன்கு உரலில் இடித்து பின் தண்ணீரில் கலந்து ஒரு தண்ணீர் பாட்டிலில் நான்கு துளைகள் இட்டு தொங்கவிட்டால் பழ ஈக்கள் ஈர்க்கப்படும். இந்த கருவாட்டு பொறி மூலம் சோளம் குருத்து ஈ மற்றும் முருங்கை பழ ஈக்களை கட்டுப்படுத்தலாம்.

# கிராம பங்கேற்பு மதிப்பீடு செய்த வேளாண் கல்லூரி மாணவிகள்



இராமநாதபுரம், ஜன.8

இராமநாதபுரம் மாவட்டம், பேரையூர் அருகே நம்மாழ்வார் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி (அருப்புக்கோட்டை) பாடத்திட்டத்தின் கீழ் கிராம பங்கேற்பு மதிப்பீடு (PRA) பெரிய தும்மகுண்டு கிராமத்தில் நடத்தினர். இதில் கிராமத்தில் உள்ள மக்களின் சராசரி தேவைகள் (ஆரம்ப சுகாதார நிலையம், அரசு மேல்நிலைப்பள்ளி, போக்குவரத்து வசதி), பயிர் வளங்கள் மற்றும் விவசாயிகளின் பிரச்சினைகளை கண்டறிந்தனர். இதனை மாணவிகள் வரைபடமாக ஊரின் நடுவே வரைந்து அதனை ஊர்மக்கள் அனைவருக்கும் விளக்கினர். மேலும் கிராமத்தில் உள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் மாணவிகள் அறிந்து ஊர் மக்கள் அனைவருக்கும் எடுத்துரைத்தனர்

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பயறுவகை பயிரில் அதிக மகசூல் பெற விதை தரம் அறிந்து விதைப்பு செய்ய வேண்டும்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உளுந்து மற்றும் பச்சைப்பயறு பயிர்கள் தைப்பட்டத்தில், அதாவது சம்பா நெல் அறுவடைக்குப்பின் அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இப்பயிர்களில் அதிக மகசூல் பெற பயிர் எண்ணிக்கை பராமரித்தல் முக்கியமான செலவில்லாத தொழில்நுட்பமாகும். பயறுவகை பயிர்கள் சாகுபடியில் ஒரு சதுர மீட்டருக்கு 33 செடிகள் என்ற அளவில் பாராமரித்தல் அவசியமானதாகும்.

இவ்வாறு பயிர் எண்ணிக்கை பராமரிக்க சாகுபடி செய்ய உள்ள வயலை தயாரிப்பதில் எவ்வளவு கவனம் செலுத்த வேண்டுமோ அதைவிட அதிக கவனம் தரமான விதைகளைப் பயன்படுத்துவதில் இருக்க வேண்டும். இதற்கு விவசாயிகள் சான்று பெற்ற விதை களையே வாங்கி பயன்படுத்த வேண்டும். சான்று பெற்ற விதைகள் அனைத்தும், விதைச்சான்று அலுவலர்களால் வயல் ஆய்வில் வயல் தரம் உறுதி செய்யப்பட்டு பின், விதைப்பரிசோதனை நிலை யத்தில் விதை பரிசோதனை செய்து, முளைப்புத்திறன், விதையின் புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிறஇரகக் கலவன்/பிற பயிர் விதைகள் அனுமதிக்கப்பட்ட அளவு கொண்டுள்ளதா? என்பதை உறுதி செய்த பின்னர் விநியோகிக்கப்படுவதால், சான்று பெற்ற விதைகளைப் பயன்படுத்தி தேவையான பயிர் எண்ணிக்கையினை பராமரித்து விதைப்பு மேற்கொண்டால் உளுந்து மற்றும் பச்சைப் பயறு சாகுபடியில் அதிக மகசூல் பெறலாம். விவசாயிகள் தங்களது கைவசம் உள்ள உளுந்து மற்றும் பச்சைப்பயறு விதைகளை விதைக்கும் பொழுது, விதையின் குறைந்தபட்ச முளைப்புத்திறன் 75 %, புறத்தூய்மை 98%, அதிகபட்ச ஈரப்பதம் 9%க்குள் உள்ளதா? என்பதை அறிய நாகப்பட்டினம் மாவட்டத்தில் வெளிப்பாளையம் 15, காளியம்மன் கோயில் தெருவில் செயல்பட்டு வரும் விதைப் பரிசோதனை நிலையத்தில், விதைகளின் முளைப்புத்திறன் அறிய 150 கிராம் விதையினை துணிப்பையில் இட்டும், ஈரப்பதம் அறிய தனியே 100 கிராம் அளவு விதைகளை காற்றுபுகாத பாலிதீன் பைகளில் இட்டும் பயிர், ரகம், தேவையான ஆய்வு விபரங்களை குறிப்பிட்டு மாதிரிகளைக் கொடுத்து மாதிரிக்கு ரூ.80/- மட்டும் செலுத்தி விதைகளை பரிசோதனை செய்து பரிசோதனை முடிவு களை விவசாயிகள் அறிந்து கொண்டு பயன் பெறலாம் என நாகப் பட்டினம் மாவட்டத்திற்கான தஞ்சாவூர் சரக விதை பரிசோதனை அலுவலர் து.சிவவீரபாண்டியன் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் அ.அமுதா தேவி ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

# ஈன்ற குட்டிகளில் தொப்புள் கொடி பராமரிப்பு முறைகள்



தொப்புள் கொடி என்பது தாய்க்கும் அதன் கருவிற்கும் இடையிலான உயிர் நாடி ஆகும். கருவில் இருக்கும் போது ஆக்ஸிஜன், ஊட்டச்சத்துக்கள் மற்றும் கழிவுகள் தொப்புள் கொடியின் மூலம் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. தொப்புள் கொடியில் ஒரு ஜோடி தமனிகள் மற்றும் ஒரு ஒற்றை தொப்புள் கொடி நரம்பு உள்ளது. பிறக்கும் போது, தொப்புள் கொடி நஞ்சுக்கொடியிலிருந்து பிரிக்கப்படுகிறது. தொப்புள் கொடி முழுமையாக உலரப்படுவதற்கு முன்பு, சுற்றுச்சூழலில் இருந்து நோயை உண்டாக்கும் நோய்க் கிருமிகள் கன்றின் வயிற்றுக்குள் நுழைய அனுமதிக்கலாம்.

இந்த நோய்க் கிருமிகள் உள்ளூர் தொப்புள் அல்லது கல்லீரல் தொற்று நோயை ஏற்படுத்தக்கூடும். மேலும் கன்றுக்குள் பரவக் கூடும், இதன் விளைவாக மூட்டு, சுவாச அல்லது அமைப்பு ரீதியான தொற்று மற்றும் இறப்பு ஏற்படலாம்.

**தொற்று இல்லாத தொப்புள் கொடி தன்மை**

- சுருங்கி உலர்ந்த
- பென்சிலை விட விட்டத்தில் சிறியது
- வீக்க மின்மை

**அறிகுறிகள்**

- **வீக்கம் மற்றும் சிவத்தல் :** தொப்புள் பகுதியில் வீக்கம், சிவத்தல், மற்றும் சூடாக இருத்தல்.
- **திரவக் கசிவு :** தொப்புளிலிருந்து சீழ் அல்லது இரத்தம் கலந்த திரவம் வெளியேறுதல்.
- **வலி :** கன்று தொப்புளைத் தொடும்போது வலி ஏற்படுத்துவது.
- **செயலின்மை :** கன்று மந்தமாக இருப்பது, பால் குடிக்காமல் இருப்பது.
- **காய்ச்சல் :** உடல் வெப்பநிலை அதிகரித்தல்.
- **மூட்டு வலி :** கன்றுகளுக்கு மூட்டுகளில் வலி ஏற்பட்டு, நடப்பதற்கு சிரமப்படுதல்.

**தொப்புள் கொடி நோயிலிருந்து கன்றுக்குட்டியைப் பாதுகாப்பு எப்படி?**

● **சுத்தமான உலர்ந்த மகப்பேறு பகுதி :** புதிதாகப் பிறந்த தொற்றுகளைத் தடுக்க, சுத்தமான மகப்பேறு தொடை பகுதியைத் தொடங்கி, பிரசவத்திற்குப் பிறகு கன்று பிரசவப் பகுதியில் இருக்கும் நேரத்தைக் குறைக்கவும். ஈரமான, அழுக்கான கன்று ஈனும் பகுதிகள், புதிதாகப் பிறந்த கன்றின் தொப்புள் அல்லது வாயை ஆக்கிரமிக்கக் கூடிய பாக்டீரியாக்களின் வளர்ச்சியை வளர்க்கின்றன. மேலும் கன்றின் அப்பாவி நோயெதிர்ப்பு மண்டலத்தை மூழ்கடிக்கும் நோய்க்கிருமி சுமையை உருவாக்குகின்றன. கன்று ஈனும் முன் தரையைத் தேய்த்து கிருமி நீக்கம் செய்ய வேண்டும்.

● தொப்புள் கொடி முறையாக கிருமி நீக்கம் செய்யவும். கன்றின் தொப்புள் கொடி மற்றும் தொப்புளை பிறந்தவுடன் கூடிய விரைவில் முழு தொப்புள் கொடியையும் தொப்புளையும் ஒரு பயனுள்ள கிருமி நாசினியால் மூழ்கடித்து கிருமி நீக்கம் செய்ய வேண்டும். சந்தையில் பயன்படுத்தக்கூடிய பல தயாரிப்புகள் உள்ளன. பிறந்த உடன் தொப்புள் கொடியை வெட்டி, உடனடியாக 4% குளோரெக்சிடின் அல்லது 7% டிஞ்சர் அயோடின் கரைசலில் முக்கி எடுத்தல் அல்லது தெளிக்க வேண்டும். இது தொப்புளை கிருமி நீக்கம் செய்தல் மற்றும் உலர்த்துதல் இரண்டையும் வழங்குகிறது. தொப்புள் காய்ந்து சுருங்கும் போது தொப்புளை உறிஞ்சும் திறன் குறைகிறது. கன்றுகள் சுத்தமான, வறண்ட சூழலில் பிறக்கும் போது, தொப்புள் கிருமி நாசினியை ஒரு முறை பயன்படுத்தினால் போதுமானது. கன்று அழுக்கு அல்லது எருவில் சிக்கியிருந்தால், தொற்று நோயைத் தடுக்க முதல் மூன்று நாட்களுக்கு தொப்புளை தினமும் கிருமி நீக்கம் செய்ய வேண்டும்.

● **சீம்பால் அருந்துதல் :** கன்றுகளுக்கு சீம்பால் கொடுப்பது மிகவும் அவசியம், ஏனெனில் இது ஆன்டிபாடிகள், இம்யூனோ குளோபுலின்கள் நிறைந்தது. சீம்பால் கன்றுகள் பிறந்த முதல் சில மணி நேரங்களுக்குள் (குறிப்பாக முதல் 2-6 மணி நேரத்திற்குள்) போதுமான அளவு குடிப்பதை உறுதி செய்ய வேண்டும். அதற்குத் தேவையான நோய் எதிர்ப்பு சக்தியையும், வளர்ச்சிக்கான ஊட்டச் சத்துக்களையும் அளித்து, பாக்டீரியா மற்றும் வைரஸ் நோய்களிலிருந்து பாதுகாக்கிறது.

● தொப்புள் கொடி காய்ந்து சிதைவடையும் வரை குட்டியை சுத்தமான, வறண்ட சூழலில் வைத்திருக்கவும். தொப்புள் கொடி சிதைவடையும் வரை, கன்றின் முதல் வாரத்தில் சுத்தமான, வறண்ட சூழலை வழங்குவது மிகவும் முக்கியம். ஒவ்வொரு கன்றையும் அதன் முதல் வாரத்தில் தினமும் சரிபார்க்கவும். உங்கள் பண்ணையில் உள்ள கன்றுகளில் 1% க்கும் குறைவானவற்றுக்கு தொப்புள் தொற்று ஏற்படுவதே குறிக்கோளாக இருக்க வேண்டும். கன்றுகளை 'ஈரமான' தொப்புள்களுடன் பண்ணைக்கு வெளியே

கொண்டு செல்லக்கூடாது. எனவே போக்குவரத்து மற்றும் இட மாற்றத்தின் போது ஏற்படும் நோய் அபாயங்களுக்கு இது மிகவும் எளிதில் பாதிக்கப்படக்கூடியது. தொப்புள் கொடி அறுந்து போகும் வரை மற்றும் தொப்புள் தொற்றுக்கான எந்த ஆதாரமும் இல்லாத வரை காத்திருக்கவும். கன்றுகளின் தொப்புள் கொடி தொற்று ஒரு தீவிரமான நிலை. சரியான நேரத்தில் சிகிச்சை அளிக்கா விட்டால், கன்றுக்கு கடுமையான உடல் நலப்பிரச்சனைகள் ஏற்பட்டு, இறக்கவும் நேரிடலாம். அதனால், அறிகுறிகளைக் கண்டறிந்தவுடன் கால்நடை மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது மிகவும் முக்கியம்.

தகவல் : **முனைவர் சு.கோகிலா, உதவி பேராசிரியர், சிகிச்சை துறை, கால்நடை மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் – 2.**



# இப்கோ வயல் விழா



கள்ளக்குறிச்சி, ஜன.8

கள்ளக்குறிச்சி மாவட்டம், மோகூர் கிராமத்தில் கரும்பு பயிரில் இப்கோ நானோ உரங்களின் குறித்து வயல் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மோகூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் தெய்வீகன் தலைமை வகித்தார். இப்கோ கள அதிகாரி அப்துல் ரஹ்மான், நானோ யூரியா மற்றும் நானோ டி.ஏ.பி. உரங்களின் முக்கியத்துவம், சரியான பயன்பாட்டு முறைகள், மேலும் குருணை உரங்களின் பயன்பாட்டை குறைத்து செலவை சிக்கனமாக்கும் வகையில் இந்நானோ உரங்கள் வழங்கும் பல்வேறு நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கினார்.

இதனைத் தொடர்ந்து, விவசாயி இளங்கோவன், தமது கரும்பு வயலில் நானோ யூரியா, நானோ டி.ஏ.பி. மற்றும் சாகரிகா திரவ உரங்களை பயன்படுத்திய அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். நானோ உரங்களை தெளித்ததன் மூலம் பயிரில் சிறந்த வளர்ச்சி, பச்சை தன்மை அவர் தெரிவித்தார். நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகள் அனைவரும் இளங்கோவனின் கரும்பு வயலை நேரில் பார்வையிட்டு, குருணை உரங்கள் பயன் படுத்தப்பட்ட வயலுக்கு இணையான வளர்ச்சி காணப்பட்டதை கவனித்து, நானோ உரங்களின் பயன் தன்மையை நேரடியாக உறுதிப்படுத்தினர். நிகழ்ச்சியின் நிறைவாக, கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் இப்கோ நானோ உரங்கள் அடங்கிய தொகுப்புகள் வழங்கப்பட்டன. இவ்வயல் விழாவில் விவசாயிகளிடையே நானோ உரங்களின் மீது நம்பிக்கையை அதிரிக்கும் வகையில் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.




# நெற்பயிரில் ஊட்டச்சத்து குறைபாடுகளை சரி செய்யும் முறையை விளக்கிய வேளாண் கல்லூரி மாணவிகள்



திருச்சி, ஜன.8

திருச்சிராப்பள்ளி (சமயபுரம்) தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை கல்லூரியை சேர்ந்த இறுதி ஆண்டு மாணவிகள் கிராமிய வேளாண்மை பயிற்சி (RAWE) திட்டத்தின் கீழ், புள்ளம்பாடி வட்டத்திற்கு உட்பட்ட வெங்கடாசலபுரம் கிராமத்தில் நெற்பயிரில் உள்ள ஊட்டச்சத்து குறைபாடுகளும் அதனை சரி செய்யும் முறைகளும் குறித்த செய்முறை விளக்க நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியின் மூலம் விவசாயிகளிடையே நெற்பயிரில் உள்ள ஊட்டச்சத்து குறைபாடுகளான நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம், கால்சியம், சல்பர் இதைக் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினோம்.

**குறைபாடு அறிகுறிகள்**

**நைட்ரஜன் :** ஈ செடியின் வளர்ச்சி தடை படுகிறது. குறைபாடு அறிகுறிகள் முதலில் இலை முனையில் தோன்றி, நரம்பு வழியாக பரவி, இறுதியில் முழு இலை உலர்ந்து செத்துவிடும். ஈ இலை முனைகள் மஞ்சளாக மாறும். குறுகி, சிறிய மற்றும் நேராக வளரும்.

**திருத்த நடவடிக்கைகள் :** பரிந்துரைக்கப்பட்ட அளவைவிட 25% அதிகமாக நைட்ரஜனை மண்ணில் இடுதல். வாரத்திற்கு ஒரு முறை 1% யூரியா கரைசல் இலை வழி தெளிக்க வேண்டும்.

**பாஸ்பரஸ் :** ஈ இலைகள் குறுகியதும், சுருக்க மாகியதும், மிக நேராக நின்று, மங்கலான கரு பச்சை நிறமாக இருக்கும். கிளை, வேர் வளர்ச்சி குறையும். இருக்கும் தண்டுகள் பலவீனமாக இருக்கும்.

**திருத்த நடவடிக்கைகள் :** ஈ பாஸ்போ பாக்டீரியா உயிர் உரத்தை விதை பூச்சி அல்லது நாற்று நனைப்பு முறையில் மண்ணில் பயன்படுத்துதல் பாஸ்பரஸ் உரத்தை ஹெக்டருக்கு 15 – 30 கிலோ அளவில் இடுதல்.

**பொட்டாசியம் :** ஈ செடிகள் அடர்ந்த பச்சை நிறத்துடன் மஞ்சள் கலந்த தோற்றம் பெறும். இலை விளிம்புகளில் பழுப்பு நஞ்சு சிதைவு இருக்கும். ஈ பாணிகளில் துருப்பிடித்த பழுப்பு நிற புள்ளிகள் தோன்றும் தண்டுகள் பலவீனமாகி, பயிர்கள் சாய்ந்து விடும்.

**திருத்த நடவடிக்கைகள் :** பரிந்துரைக்கப்பட்ட அளவை விட 25% அதிகமாக பொட்டாசியம் மண்ணில் இடித்தல். 1% கேசியல் இலை தெளிப்பு.

**கால்சியம் :** இளம் இலைகளில் வெள்ளை அல்லது வெளிறிய சுருண்ட நுனிகள். பழைய இலைகள் பழுப்பு நிறமாக மாறி இறந்து விடும்.

**சரிப்படுத்தும் நடவடிக்கைகள் :** பண்ணை உரம் அல்லது வைகோலை இடவும் அமில மண்ணின் கால்சியத்தை அதிகபட்ட சுண்ணாம்பு இடவும்

**சல்பர் :** மஞ்சள் அல்லது வெளிர் பச்சை நிறத்தில் மாறும் நுனி களை சிதைக்கும் விளைச்சலை அதிகமாக்கும்.

**சரிப்படுத்தும் நடவடிக்கைகள் :** அறுவடைக்கு பிறகு உலர் உலவு மேற்கொள்ளவும். 15-20 கிலோ கந்தகம் இடவும்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கிரியா விவசாயிகள் நெற் பயிரில் உள்ள ஊட்டச்சத்து குறைபாடுகளும் அதனை சரி செய்யும் தொடர்பான முறைகளும் தொடர்பான தங்களின் சந்தேகங்கைளை மாணவர்களிடம் கேட்டு தெளிவு பெற்றனர்.




வசந்தம் அக்ரிடெக்
VASANTHAM
Agri Tech
தலைமை அலுவலகம்: 129/1ஏ2, வண்டியூர் ரிங் ரோடு,
சங்கு நகர், மதுரை, தமிழ்நாடு-625020.
கிளைகள்:-மதுரை,சிவகங்கை,திருநெல்வேலி
1 பவர் வீடர் = 40 வேலை ஆட்கள்
இப்போது அரசு மானியத்தில்
40% - பெரிய விவசாயி
50% - பெண்கள் / SC/ST
60% - சிறுகுறு விவசாயி
70% - சிறுகுறு விவசாயி & SC/ST
மானியத்திற்கு விண்ணப்பிக்க
தேவையான ஆவணங்கள்
ஆதார்
புகைப்படம்
பட்டா
அடங்கல்
சாதிச் சான்றிதழ் (தகுதி இருந்தால்)
சிறுகுறு விவசாயி சான்றிதழ்
உடனடி மானியம் உள்ள
மாவட்டங்கள்
மதுரை
சிவகங்கை
விருதுநகர்
ராம்நாடு
Sarathi i06
Yield max VT 260
Sirachi 8D6
1,22,344 மதிப்புள்ள 9 HP டீசல் பவர் வீடர்,SC மற்றும்
சிறு விவசாயிக்கு 36,703 மட்டுமே
இப்போதே விண்ணப்பியுங்கள் +91 75400 66652

# விதை நேர்த்தி குறித்து செயல்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



பெரம்பலூர், ஜன.8

பெரம்பலூர் மாவட்டம், வேளாண் அறிவியல் மையம் (KVK) விவசாயிகள் கூட்டத்தில், திருச்சிராப்பள்ளி மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் இணைந்து விவசாயிகளுக்கு விதை நேர்த்தி குறித்த செயல்முறை விளக்கத்தை நடத்தினர். இந்த கூட்டத்தில், அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி தலைமை தாங்கினார். இதில் பயிர் பாதுகாப்பில் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

**முக்கிய அம்சங்கள் :** மாணவிகள் குழுவினர், டிரைக்கோடெர்மா விரிடி (10கி/கிலோ விதை என்றளவில்) மற்றும் சூடோமோனாஸ் ஃபுளோரசன்ஸ் ஆகியவற்றைப் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்யும் முறைகளைச் செய்து காட்டினர்.

**நோய் கட்டுப்பாடு :** இந்த முறையைப் பின்பற்றுவதன் மூலம் மண் மூலம் பரவும் பூஞ்சை நோய்கள், வேர் அழுகல், நாற்றழுகல், வாடல் நோய் மற்றும் இலைக்கருகல் நோய் போன்றவற்றைத் தடுக்க முடியும்.

**பயிர் வளர்ச்சி :** இது வேர் வளர்ச்சியைத் தூண்டி, பயிரின் ஒட்டு மொத்த வளர்ச்சியையும் ஆரோக்கியத்தையும் மேம்படுத்துகிறது.

**பயன்படுத்தும் முறைகள் :** விதைகள் மட்டுமின்றி, மண் கலவை மற்றும் இலை வழித் தெளிப்பு மூலமாகவும் இதனைப் பயன் படுத்தலாம் என விளக்கப்பட்டது.

இயற்கை உரங்களுடன் இவற்றை இணைத்துப் பயன் படுத்துவதன் மூலம் அதிக மகசூலை ஈட்ட முடியும் என மாணவிகள் வலியுறுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் மாணவிகள் ஆர்யா பிஜ், கௌரி செ, ஜெசிகா, ஜீவா.சொ, கீர்த்தனா ச, மோனிக்கா து, மோத்திகா ரா, மற்றும் யாழினி.செ ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளின் சந்தேகங் களுக்கு விளக்கம் அளித்தனர்.

# இயற்கை வேளாண்மையின் உத்திகள்

# பீஜாமிர்தம் தயாரிக்கும் முறைகள்

**இயற்கை வேளாண்மையின் உத்திகள்**

- விதை நேர்த்தி
- ஊட்டச்சத்து மேலாண்மை
- நீர் மேலாண்மை
- மண் மற்றும் பயிர்நுண் காலநிலை மேலாண்மை
- கலப்பு பயிர் முறை பயிர் மேலாண்மை



விதைகளை விதைப்பதற்கு முன் நாட்டு மாட்டுசாணம், மாட்டு கோமியம், சுண்ணாம்பு மற்றும் விவசாய நிலத்தின் மண் (பீஜாமிர்தம்) ஆகியவற்றைக் கொண்டு விதைநேர்த்தி செய்வது முதல்படி ஆகும். பசுவின் சாணம், மாட்டு கோமியம் உளுந்து மாவு, வெல்லம் மற்றும் மரத்தடி மண்ணின் கலவையைத் தயாரித்து ஜீவாமிர்தம் புளிக்க வைக்கப்படுகிறது. தழைக்கூளம், (பயிர் எச்சங்கள்) இதனை இட்டு உழுவதற்கு பதிலாக, பயிர்களின் எச்சங்களை நிலத்தில் பரப்படுகிறது. இதனால் நிலம் மேம் படுத்தப்படுகிறது. இம்முறை விவசாயத்தில், நீர்ப்பாசனத்திற்கு பதிலாக, மண்ணின் ஈரப்பதம் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

## இயற்கை வேளாண்மை தாவர ஊட்டச்சத்து மேலாண்மை

**பீஜாமிர்தம் :** ஒரு தாவரத்தின் வாழ்க்கை விதையில் இருந்து தொடங்கி விதையில் முடிகிறது. எனவே, விதை தரமாக இருப்பது மிகவும் முக்கியம். விதைகள் நோய் காரணிகள் மற்றும் பூச்சிகளால் பாதிக்கப்பட்டால், அதிலிருந்து வளரும் பயிர்கள் பலவீனமாகவும், வீரிய மற்றதாகவும் காணப்படும். சுத்திகரிக்கப்படாத விதைகள் தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் மற்றும் விதை மூலம் பரவும் நோய்த் தொற்றுகளுக்கு ஆளாகின்றன. எனவே, தரமான விதை, இயற்கை விவசாயத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. இயற்கை விவசாயத்தின் கீழ், விதைகள் பீஜாமிர்தத்தில் விதைநேர்த்தி செய்யப்படுகின்றன. பீஜாமிர்த்தை விதைகளின் அமிர்தம் என்று அழைத்தால், அது மிகையாகாது. ஏனென்றால் விதைகளை நேர்த்தி செய்வதன் மூலம் விதைகளின் முளைக்கும் திறனை அதிகரிப்பதுடன் விவசாயிகளின் பணம் வீணாகாமல் சேமிக்கப்படுகின்ற. பீஜாமிருத்தை விவசாயி தனது வீட்டில் அல்லது பண்ணையில் எளிதாகத் தயாரிக்கலாம்.

## பீஜாமிர்தத்துடன் விதை நேர்த்தி செய்வதனால் நன்மைகள் பின்வருமாறு

1. விதைகளின் முளைக்கும் திறன் அதிகரிக்கிறது.
2. விதைகளின் உறக்க நிலை விரைவாக உடைக்கப்படுகிறது.
3. விதைகள் சீரான முளைக்கும் தன்மை கொண்டதாக காணப் படுகிறது.
4. பயிர்கள் ஆரோக்கியமாக வளர்கிறது.
5. பீஜாமிர்த கரைசலை இலைகளில் தெளிப்பதாலும் பல்வேறு பயிர்களில் மகசூல் அதிகரிக்கிறது.
6. விதைகள் விரைவாக முளைக்கும்
7. முளைக்கும் சதவீதம் அதிகரிக்கிறது
8. வேர்கள் வேகமாக வளரும்
9. தாவரங்கள் நன்றாக பூக்கும்
10. பூஞ்சை / வைரஸ் தாக்குதலை தடுக்கிறது.

**பீஜாமிர்தம் செய்ய தேவையான பொருட்கள்**

| பொருட்கள் | 100 கிலோ விதை விதைப்புகாக தேவையான பொருள் |
|---|---|
| தண்ணீர் | 20 லிட்டர் |
| நாட்டு மாட்டு கோமியம் | 5 லிட்டர் |
| நாட்டு மாட்டு சாணம் | 50 கிலோ |
| சுண்ணாம்பு | 50 கிராம் |
| பயிர் வேர் அருகே உள்ள மண் / சாகுபடி நிலமண் | கை நிறைய |

விவசாயியின் வருமானத்திற்கு ஏற்ப இவை அனைத்தையும் தயார் செய்யலாம். பின்னர் கடிகார முள் நகரும் திசையிலும் அதன் எதிர்திசையிலும், ஒரு மர குச்சியால் மெதுவாக கலக்க வேண்டும். அதை ஒரு கோணி பையால் மூடி நிழலில் வைக்க வேண்டும். இந்த கரைசலை 24 மணி நேரம் வைத்திருந்த பிறகு விதை நேர்த்தி செய்யலாம்.

**குறிப்பு**

- நாட்டு மாட்டு சாணத்தை மட்டும் பயன்படுத்தவும்.
- மாடு அண்மையில் இட்ட சாணம் மட்டுமே நன்றாக இருக்கும்.
- பசுவின் சாணம் தான் பயனுள்ளதாக இருக்கும்.

**மாட்டு கோமியம்**

- பசு எவ்வளவு பால் கொடுக்கிறதோ, அந்த அளவு அதன் சாணம் மற்றும் கோமியத்தின் செயல்பாடும் குறைவானதாக இருக்கும். அதனால் தான் நாட்டு மாட்டின் கோமியம் சிறந்தாகக் கருத்தப்படுகிறது. பீஜாமிர்தத்தை அனைத்து விதைகளுக்கு விதை நேர்த்தி செய்ய உபயோகிக்கலாம்.

- நடவு பயிர்களின் வேர்களை பீஜாமிர்தத்தில் நனைத்து நடவு செய்ய வேண்டும். இது பயிர்களை பூச்சிகள் மற்றும் நோய்களிலிருந்து பாதுகாக்கிறது.

பீஜாமிர்த கரைசலில் உள்ள நுண்ணுயிர்களின் எண்ணிக்கை பின் வருமாறு கண்டறியப்பட்டுள்ளது.

| நுண்ணுயிர்கள் | எண்ணிக்கை (அலகு / மி.லி) |
|---|---|
| பாக்டீரியா | $20.4 \times 10^6$ அலகு / மி.லி |
| பூஞ்சை | $13.8 \times 10^6$ அலகு / மி.லி |
| ஆக்டினோமை சீட்ஸ் | $3.6 \times 10^6$ அலகு / மி.லி |
| பாஸ்பரஸ் கரைப்பான்கள் | $4.5 \times 10^6$ அலகு / மி.லி |
| நைட்ரஜன் நிலைநிறுத்திகள் | $50 \times 10^6$ அலகு / மி.லி |

(புதன் மற்றும் ராம், 2013)

### பீஜாமிர்தத்தின் ஊட்டச்சத்து நிலை

| சத்து கூறுகள் | அளவுகள் |
|---|---|
| பி.எச் (அமில காரநிலை) | 7.07 |
| மின் கடத்துதிறன் (கரையக்கூடிய உப்பு) | 35 டி.எஸ் / எம் |
| மொத்த நைட்ரஜன் | 770 பிபிஎம் |
| மொத்த பாஸ்பரஸ் | 166 பிபிஎம் |
| மொத்த பொட்டாசியம் | 126 பிபிஎம் |
| மொத்த துத்தநாகம் | 4.20 பிபிஎம் |
| மொத்த செம்பு | 1.58 பிபிஎம் |
| மொத்த இரும்பு | 282 பிபிஎம் |
| மொத்த மாங்கனீசு | 10.7 பிபிஎம் |

(பதக் மற்றும் ராம், 2013)

### பீஜாமிர்தத்தை பயன்படுத்தும் முறை

- பீஜாமிர்தத்தை விதைகளின் மேல் தெளிக்க வேண்டும். பிறகு விதைகளை கையால் கலக்க வேண்டும். பிறகு விதைகள் (நெல், கோதுமை, சோளம்) உலர்ந்த பின்வயல்களில் விதைக்கலாம்.

- விதைநேர்த்தி செய்த 7 நாட்களுக்குள் பயன்படுத்த வேண்டும்.

- நடவு பயிர்களுக்கு, நாற்றின் வேர்களை நன்றாக பீஜாமிர் தத்தில் நணைத்து பிறகு நடவு செய்ய வேண்டும்.

- பயறுவகை பயிர்களின் விதைகளின் மெல்லிய ஓடு காரண மாக, கைகளால் தேய்க்கும் போது உடைந்து விடும். விதைக்க வேண்டிய பயிர் விதைகளை தரையில் பரப்பி பீஜாமிர்தத்தை தெளிக்கவும். இரண்டு கைகளின் விரல்களையும் விரித்து விதை களை மெதுவாக மேலும் கீழும் கலக்கவும். விதைகளை நிழலில் உலர்த்திய பின் விதைக்கவும்.

- நிலக்கடலை/சோயாபீன், அவற்றின் தோல்கள் மிகவும் மெல் லியதாகவும், உணர்திறன் கொண்டதாகவும் இருக்கும் அவற்றின் விதைகளின் அளவுகளில் 10% பீஜாமிர்தத்தை உபயோகிக்க வேண்டும்.

- கரும்பு/வாழை/உருளைக்கிழங்கு/மஞ்சள்/இஞ்சி பயிர்களின் விதைகளை ஒரு மூங்கில் கூடையில் வைத்து பீஜாமிர்தத்தில் சிறிது நேரம் மூழ்க செய்து விதைகளுடன் கூடையை வெளியே எடுக்க வேண்டும். இதற்கு பிறகு விதைகளை விதைக்க வேண்டும். காய்கறி விதைகளை எடுத்த பிறகு குளிர்ந்த நீரில் கழுவி, பீஜாமிர் தத்துடன் விதை நேர்த்தி செய்து நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். பழங்களின் விதைகளை சாதாரண முறையில் கையாளலாம்.

- முருங்கை, வெற்றிலை, கருப்பு, மிளகு போன்றவைக்கு பயிர் களுக்கு ஒரு மூங்கில் கூடையில் விதைகளை வைத்து, பீஜாமிர்தத்தில்

நனைத்து பிறகு விதைக்கலாம்.நாற்றங்காலில் விதைகளை விதைப்ப தற்கு முன் விதை நேர்த்தி செய்துஅதன் பிறகு நடவு செய்யும் போது, நாற்றங்காலில் இருந்து நாற்றுகளை வெளியே எடுத்து பீஜாமிர்தத்தில் நனைத்து பிறகு நடலாம்.

மேலும் விவரங்களுக்கு **இரா.ஜெகதாம்பாள், திட்ட ஒருங்கிணைப் பாளர்** மற்றும் **பெ.கலைச்செல்வி, மா.இரவி, அ.சங்கர், ம.பூஜா, செ.பிரபாகரன், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூர், சேலம் – 636 203. தொடர்புக்கு : 0427 242 2550.**

## பகுதி நேர பணியில் வருமானம் ஈட்ட இணையவழி பயிர் கணக்கெடுப்பிற்கு வேளாண்மை இணை இயக்குநர் அழைப்பு

அரியலூர், ஜன.8

அரியலூர் மாவட்டத்தில் ராபி பருவத்தில் 2025-26 சாகுபடி செய்யப் பட்டுள்ள பயிர்களுக்கு இணையவழி கணக்கெடுப்பு (DCS) வேளாண்மை துறை மூலம் நடைபெற்று வருகிறது. பழைய முறையில் அடங்கல் முறைக்கு மாற்றாக இணையவழி செயலி மூலம் கணக்கெடுப்பு செய்வதால் மாவட்டத்தில் மொத்த பயிர்களின் சாகுபடி பரப்பு, உற்பத்;தி கணக்கீடு செய்ய இயலும். மேலும், பூச்சி நோய் தாக்குதல் விவரம் மற்றும் பயிர் சேத கணக்கீடு செய்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க இயலும். இப்பணிக்கு படித்த ஆர்வமுள்ள வீட்டில் உள்ள ஆண், பெண், கல்லூரி மாணவ, மாணவிகள், சுய உதவி குழுக்கள், படித்த பட்டதாரிகள், ஓய்வு பெற்ற அலுவலர்கள், தன்னார்வலர்கள், NGO உறுப்பினர்கள் மேற்கொள்ளலாம். இப்பணியினை மேற்கொள்ள குறைந்த பட்சம் ஆன்டிராய்டு செல்போன் இருந்தால் போதுமானது. இப்பணியினை காலை 6 முதல் 10 வரை செய்தாலே குறைந்த பட்சம் 1200 முதல் 1500 வரை வருமானம் ஈட்டலாம். பயிர் கணக்கீடு செயலி காலை 6 மணி முதல் 10 மணி வரை வேகமாக செயல்படுவதால் 4 மணி நேரத்தில் குறைந்த பட்சம் 30 சர்வே எண்களில் உட்பிரிவு எண் களை கணக்கீடு செய்யலாம். ஒவ்வொரு சர்வே எண்ணிலும் சராசரி யாக குறைந்தபட்சம் 20 உட்பிரிவுகள் இருப்பதால் 400 முதல் 500 உட்பிரிவுகளை பதிவேற்றம் செய்ய இயலும். உட்பிரிவுக்கு (சப் டிவின்) ரூ.3/- வீதம் வழங்கப்படுவதால் 4 மணி நேரத்தில் 1200 முதல் 1500 வரை வருமானம் ஈட்டும் வாய்ப்புள்ளது. இப்பணியில் சேர அரியலூர் வட்டாரம், சிந்துஜா, 63696 54791, செந்துறை வட்டாரம், சுகந்தி, 99426 38150, திருமானூர் வட்டாரம், சதிஷ், 70101 78765, ஜெயங் கொண்டம் வட்டாரம், மகேந்திரவர்மன், 72002 33393, ஆண்டிமடம் வட்டாரம், ராதிகா, 99436 48446 மற்றும் தா.பழூர் வட்டாரம், தமிழ் மணி, 75028 21228 வாட்ஸ் அப் எண்ணில் முன்பதிவு செய்து கொள்ள லாம். மேலும் அரியலூர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவல கத்தில் உள்ள வேளாண் அலுவலர் ஆதிகேசன், 99427 84312 என்ற எண்ணிலும் முன்பதிவு செய்து கொள்ளலாம் என வேளாண்மை இணை இயக்குநர் ஜெ.உலகம்மை முருகக்கனி தெரிவித்தார்.